45. வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலில் இறைக்கொள்கை
முனைவர் அ.ஜான்சி மேரி 221
46. பாரதியார் கவிதைகளில் இறைக்கொள்கை
ஞா. அந்தோணி நிக்சன் 227
47. இறையன்பு இனங்காட்டும் இறைக்கொள்கைகள்
முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி 232
48. 'நிலவொன்று கண்டேன்' புதினத்தில் சமய நம்பிக்கைகள்
பொ.சாரதா 237
49. நாட்டுப்புற மக்களின் இறைக் கொள்கை
திருமதி. சே.மகரஜோதி அய்யப்பன் 242
50. இலக்கியங்களில் இறைக் கொள்கை
முனைவர் செ. ரெஜினா 247
51. இறைக்கொள்கையில் கடவுள் ஒப்பனை
வி.பிரியதர்ஷினி 252
52. செம்மொழி இலக்கியத்தில் இசுலாமிய இறைக் கொள்கை
பா. ரம்ஜான் 256



Scanned by CamScanner

# 45. வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலில் இறைக்கொள்கை

முனைவர் அ.ஜான்சி மேரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
பெரியகுளம்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணகது, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்கச் சான்றோர்கள் அருளிய செந்தமிழ்த் தனிப்பெரு நூல்களின் முன்னும், பின்னுள்ள திருக்கோவையார், சிந்தாமணி முதலிய பன்னூல்களின்கண்ணும் சிறந்து விளங்கும் அறமுறை ஒழுக்கமெல்லாம் மக்கள் கற்றுணர்ந்து நன்னெறி சார்ந்த இறைக்கொள்கைகளை கடைபிடித்து வாழ்ந்தனர். இன்றைய சூழலுக்குத் தகுந்தவாறு மக்கள் அதிக அளவு இறைக்கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் வேதநாயகம் பிள்ளை அவர்கள் நீதிநூலில் குறிப்பிட்டுள்ள செய்திகளை இக்கட்டுரை வாயிலாகக் காண்போம்.
நீதிநூல் என்னும் இந்நூல் மாயூரம் மாவட்ட நீதி மன்றத் தலைவர் (முனிசீப்) திரு. வேதநாயகம் பிள்ளையவர்களால் யாக்கப்பெற்ற அறநூலாகும். இவர் கடவுட் பற்றும், பொற்புடைக் கற்பொழுக்கமும், கலைநல மாண்பும், கலைபயில் பண்புடையாளர் தொடர்பும், ஊனூண் துறத்தலும், அறிவும், அறமும், உலையா முயற்சியும் நிலையாகக் கொண்டவர். மக்கள் இறைக்கொள்கைகளைக் கடைபிடித்து ஒழுக்க நெறியுடன் வாழ இந்நூலை இவர் படைத்துள்ளார்.

## தெய்வமுண்டெனல்

கோவிலைப் பழிப்பது கடவுளைப் பழிப்பதாகும். கொற்றன், தட்டான், நெய்வோன் ஒருவன் உளன் என்று உய்த்துணர்வதுபோல், உலகமும் பிறவும் கண்டதும், இவற்றைப் படைத்தருளிய முழுமுதல் கடவுள் உண்டு என்று நெஞ்சே உணர்ந்துகொள். உயிரினங்கள் கடவுள் இன்றி உடல் கொண்டு உலகத்தில் தோன்றலாகாது. தலைவன் இல்லாத வீடு நடவாமைபோலக் கடவுளில்லாத உலகமும், உலகத்து ஞாயிறு திங்கள் விண்மீன் முதலியன தோன்றலும், மழைபெய்தலும் உயிர்கள் வாழ்தலும் நிகழாது. நிலம், நீர், தீ முதலிய பூதங்களுக்கு ஆதாரமாய் உள்ள காற்றை,வானத்தை,அறிவை,உயிரை, அறத்தைக் கண்ணால்



Scanned by CamScanner

பார்ப்பதில்லை ஆனால் உண்டென்று ஒப்புக் கொள்கின்றோம். அதுபோன்று தெய்வம் உண்டென்பதும் தெளிவு. வானின்றி மழையுமில்லை, வயலின்றி விளைவுமில்லை ஆவின்றிக் கன்றுமில்லை, அரியின்றியொளியுமில்லை, கோவின்றிக் காவலில்லை, குமரர்தாயின்றியில்லை மேவின்ற கடவுளின்றி மேதினியில்லை என்கிறார் ஆசிரியர். தெய்வம் என்ற ஒன்று உலகில் உண்டு என்று அறைகிறார்.

தெய்வத்தன்மை

முதலும் முடிவும் இல்லாதவன், குற்றமில்லாதவன், அண்டங்களைப் படைத்து ஒடுக்கும் வலிமையுள்ளவன், ஒப்பில்லாதவன், உருவில்லாதவன், பரவெளியில் தங்கும் பேரொளியானவன், ஒளிநிழலானவன் சிறந்த அறமே உருக்கொண்டனைய மாண்பினன் கடவுள். அவனே தூய தலைவனும், தந்தையும் ஆவன். இடுக்கணொன்றிக் காக்கும் எம்பிரான் பெரியனன்றோ. எல்லாம் ஆன இறைவனுக்கு முடியும் அடியும் எவ்விடத்தின என்று காண முடியாது. கடவுள் திருவருள் நமக்கு இருக்குமானால் உலகமெல்லாம் பகைத்தாலும் துன்பம் ஒன்றும் உண்டாகாது.

"எங்கனு முள்ளோன் றாளுன் விருக்கையி லிருந்து போற்றிப்
பங்கமில் சுகம்பெற் றுய்யப் பாரமென் பகராய் நெஞ்சே".

என்று தெய்வத்தின் மேன்மையினைப் பறைசாற்றுகின்றார்.

அரசியல்பு

குடிகள் நலமே எண்ணுபவனும், கடுமொழியில்லாதவனும், தந்தைதாய் போல் பேணுபவனும் மன்னனாவான். மக்களின் துன்பம் நீக்கும் வரை ஊன் உறக்கமின்றி, நகரெங்கும் காணும்படி வருவோன் மன்னன். நல் அறிவாளரைக் கொண்டு அரசு நடத்தி, மக்கள் எல்லாம் செழிப்புடன் மகிழ்வுற்று வாழ நடுவு நிலையில் நீங்காது புகழுடன் ஆள்வோன் மன்னன். கடவுள் மாட்டு நீங்காப் பேரன்புடையவன் அரசன்.

"கொடியமன் னவர்க்குக் குடிகளே யொன்னார்
கோட்டையே யமர்க்களம் அவர்தம்
அடிகள்நோய் நிலமெங் கனும்படு குழியாம்
அயின்றிடும் அன்னமும் விடமாம்".

எனும் பாடல் மன்னனது சிறப்பினை எடுத்தியம்புகிறது.

குடிகளியல்பு

நாடும் மொழியும் நலமுறக் கூடிவாழ்வதே குடிகள் இயல்பு. மனையாள் மக்கள் வாழ்வு எல்லாம் மன்னவனாலேயே நிலைக்கும். மன்னன் செங்கோல் ஆட்சி செய்யாவிட்டால் வாழ்க்கை முறைகள்





எல்லாம் வளங்குன்றி அழியும். நயம் செய் மன்னவன் ஞாயிறு போல்வான். வலிமையுடைய அரசன்வழி உலகம் நடக்கும். அரசன் ஆணைக்கு அடங்கி நடப்பதே பெருமை.முறை தவறிய மன்னர்களுக்குக் குடிகளே பகைவர். இதை,

"கோவரிய சீவன் குடிகளுட லாவார்
சீவன்சும் மாவிருக்கத் தேகமுழைத் தோம்புதல்போற்
பூவலய மீதினில்தம் பூட்சிகளி னாலுழைத்துக்
காவலனைக் காக்கக் கடனாங் குடிகளுக்கே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

ஞானாசிரியன்

இறைவனை உணர்த்தி இன்பருள்வோன் ஆசான். மக்கள் ஞானாசிரியனாகிய விளக்கின்றிப் பிறவியாகிய இருளைக் கடவார். அவர்களுக்குக் கடவுள் நிலை கிடைக்காது. மெய்யுணர்ந்தார் கடவுளுக்கு அடிமையாய்த் தூய மறைப்பொருளை எல்லோரும் வீடுபெறும் பொருட்டு ஓதுவர். வாய் ஒடுங்கிய கலத்துள் நீரைச் சிறிது சிறிதாகச் செலுத்துவது போன்று ஆசானும் நன்னெறி நூன் முறையைச் சிறுவர்க்கும், உணர்ந்தறியாதார்க்கும், ஏழைகட்கும் விளங்கும்படி வகை செய்து தெளிவாக உழைப்பான்.

"வைவார்தமை வாழ்த்தியு நெஞ்சில் வருத்தமுற்று
நைவாருடன் நைந்தழு தந்தமை நண்ணித் துன்பஞ்
செய்வாருறு பீழை நினைத்துதஞ் சிந்தை நொந்து
மெய்மாமறை யின்பய னோதுவர் மேன்மை யோரே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

தாய் தந்தையரை வணங்கல்

வைத்து வளர்த்த்வர்க்குப் பூ, நிழல், பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்று, தாய் தந்தையரை வணங்காத அறிவிலாரை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவான். பெற்றோர் அன்பு அளவிட்டுக் கூற முடியாதது. எதிர் நோக்கா அன்புதவி ஈன்றாரே செய்வர். இல்லாள், மக்கள், பொருள் இவற்றை இழந்தால் மீட்டும் வேறு பெற்றுக் கொள்ளலாம். அத்தன் அன்னையரிறந்திடின், வேறு அன்னையர் வாரார்.

"ஒருத்திபஞ்ச காலத்தில் தாதைக்குந்
..........................................................
யீன்றோரைத் தாங்கு வாயே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.



Scanned by CamScanner

**கணவன் மனைவியர் இயல்பு**

முதலும் முடிவுமில்லாத முழுமுதலே முதல் தெய்வம். கணவன் கடவுளாக் கருதும் இரண்டாம் தெய்வம். கணவனை அன்புடன் நினைந்துருகும் கற்புடைய பெண்கள், பெண்களுக்கெல்லாம் தெய்வமாவார். கணவனாயினும் மனைவியாயினும் நல்ல தன்மையில்லாதவரானால், ஒருவரையொருவர் இன்சொல்லால் நல்ல வழிக்குத் திருப்புதல் வேண்டும். உலக நாடகத்தில் உண்மையாகவே கணவன் மனைவியரென்ற இருவரும் செம்மையாக ஒழுகல் வேண்டும். இல்லாவிட்டால் உலக நாடகத்தைச் செய்விக்கும் ஆண்டவன் அவர்களைத் துன்பத்திற் புகுத்தி வருத்துவான். கணவனும், மனைவியும் மனம் ஒத்து, கடவுளையடையும் குறிக்கோள் ஒன்றை நாடிச் செல்ல வேண்டும்.கற்புடையார் மன்னன் கை வாளுக்கும் அஞ்சார்.

"இருதுணைவர் தனக்குளரெளன் றிறைவிசொல ஐயமுற்றிங்
கொருதுணையான் அறிகுவன்மற் றொருதுணையா ரெனவினவப்
பெருமகனையுன்னை யென்னைப் பேரண்டங் களையமைத்தான்
தருமநிலை மூர்த்தியென்றாள் சதியிவட்கோர் குறையுளதோ".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்**

ஆண்டவனே எல்லார்க்கும் சிறந்த தந்தை. மக்களெல்லாம் அவன் பிள்ளைகள். உலகப்பொருள் எல்லோருக்கும் பொது. இவ்வாறன்றிப் பொருளைத் தங்கட்கே உரிய கருவிபோல் செப்பேட்டில் எழுதி ஆவணம் பெற்றவர்கள் இல்லை. செல்வத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோரைப் பேணுதல் அருளும் கடமையும் ஆகும். மாசற்ற கடவுளே எல்லோருக்கும் முதல்வராவார். கடவுளுக்கு ஆசரும் வறியரும் ஒன்றே. நற்பண்புள்ளவர் வறியரை என்றும் காப்பாற்றுவார்.

"பதிமுத லதிகா ரத்தோர் பண்ணவர் உழவர் மேலோர்
மதியுறு பரதர் நூலோர் மருத்துவர் முதலோர் தத்தம்
விதிவழி யொழுகித் தம்மை மேவுறு தாழ்ந்தோ தம்மை
அதிதயை யொருநன் கோம்பி யாண்டிடக் கடனா மாதோ"

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**பொல்லாங்கு எவைக்கும் பொய்யே பிறப்பிடம்**

மெய் ஒன்றே எல்லாமுணர்ந்த சான்றோர்க்கு நண்பனாகும். இழிவு தரும் பொய்யாரைப் பொய்யரும் சேரார். பொய்யா உள்ளமும் அவர்களைப் பழிக்கும். பொய் முதலிய பழியில்லாதவர் ஒருவர்க்கும் அஞ்சாது





அறவழியிலே நடப்பர்.பழியும் பாவமும் பயப்பன பொய்யே.விரிந்த உலகமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஒப்பில்லாத முழுமுதல்வனுடைய சினந்துக்கு அஞ்சாது, நல் அறிவில்லாத கீழோர்க்கு அஞ்சிய பொய் கூறுதல் தெய்வத்தினும் மக்கள் மேன்மையுள்ளவர் என்று நினைத்து நடப்பதை ஒக்கும்.

"குலங்களினுங் கடையராஞ் சாணமதை
யமுதுவைக்குங் கோலச் செம்பொற்
கலங்களின்வைத் தலையொக்கும் மெய்க்குரிய
வாயாற்பொய் கழற லன்றே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**எத்துன்பம் வந்தாலும் களவுசெய இசையேல்**

எந்நாளும் நீங்காத பல நோய் அடைந்து துன்புற்றாலும், கை ஏந்திப் பிச்சை எடுக்கும் படி வறுமை வந்தாலும், சொல்ல முடியாத வருத்தம் ஏற்பட்டாலும் களவு செய்யும் படியான தீச்செயலுக்கு இசையாதப்டி வாழ நெஞ்சமே ஆண்டவனை வணங்கித் தொழு.கன்னம் பொய்காசு கைக்கூலி களவே.கொல்ல நினைத்தலும் கொடுமொழியும் கொலையே.

"கண்டெ டுத்தவோர் பொருளனு பவித்தலுங் களவின்
பண்டம் வாங்கலும் வாங்கிய கடன்கொடாப் பழியும்
மண்டும் வண்பொரு ளாசையாற் பொய்வழக் கிடலுந்
தொண்டு செய்பவர் கூலியைக் குறைக்கின்ற தொழிலும்".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**இனியசொற்கூறல்**

இன்சொல் சொல்லுவதால் இழப்பின்றிப் பகைவரை நண்பராக்கி வாழலாம். நன்மை புரியாதவர்களும் கொடுஞ்சொல் கூறாரானால் நல்லவரெனப் புகழ் பெறுவர். அறிவிற் பெரியோர் அனைவரையும் பணிவர் .பிறர் கெடும்படி தீமை செய்ய நினைத்தவர்க்கே அத்தீமை வந்து சேர்ந்து அவர் கெடுவர்.

"துதிபுரிந் துபசரிக்கும் தொழிலினாற் செலவொன் றில்லை
அதிர்படல் உலகு ளோர்தம் அன்பெலாம் வரவா மாஜே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**நற்புகழ்**

ஒருவனைக் காணவிடத்து அவன் புகழை எடுத்துப் பேசுதல் அறமுறையாம்.மழைநீரால் பயிர்வளம் நிலைக்கும். அதுபோல குணச்சிறப்பால் புகழ் நிலைக்க வேண்டும். நல்லொழுக்கமே நற்புகழ்



Scanned by CamScanner

பெறும் வழி. தன்னைத்தானே புகழ்பவனை உலகோர் பழிப்பர். நற்புகழ் பெறவேண்டும் என்னும் பெருநசையுள்ளவர் உண்மை ஒழுக்கத்தால் தூய்மை எய்துவர்.

"பெருமுறை யீதெனில் பிறர்முன் தன்னைத்தான்
பொருளென மெச்சல்போற் புன்மை வேறுண்டோ".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**கைம்மாறு கருதா உதவி**

ஏழைகளுக்கு உதவாது இருப்பது இழுக்கு. ஊண் உடையின் மிச்சமெல்லாம் உதவுவோர் வீடடைவர் .கையேந்தும் ஏழைபோல் கடவுளும் வருவன். ஈவோர்க்கின்பும் ஈயார்க்குத் துன்பும் ஈவர் இரப்போர். புகழும் நாடாது செய்வதே புண்ணியம். உற்ற காலத்து எவ்வகைப் பயனையும் நாடாது மனமொத்துச் செய்த நன்மை 'ஞாலத்தினும் மாணப் பெரிதாம்'.

"புள்ளுவம் இழைக்கா நின்ற பொருந்தலர்க் காற்று நன்றி
விள்ளும்வீட் டின்பந் தன்னை விளைக்கின்ற வித்தாம் நெஞ்சே".

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**மக்களை வளர்த்தலும் படிப்பித்தலும்**

தீமையும் நன்மையும் தாமாகத் தெரிந்து கொள்ளும் தன்மையில்லாத மக்களைத் தாய் தந்தையர் நல்வழிப்படுத்த வேண்டும். மரத்தின் வளைவை இளமையில் நிமிர்த்தலும் பொன் இளகியிருக்கும்போது நகை செய்தலும் வாய்ப்பது போல், மக்கட்கு இளமையில்தான் நல்ல நூற்கேள்வியும் மாண்பும் நற்குணமும் வாய்க்கும்.

சுகமுறு வாழ்வில் வெனினுந் தோன்றற்குச்
சகமகிழ் கலையறந் தனைப்பயிற்றுதல்
அகநினைந் ததுதரும் அரத னந்தனை
இகபரம் இரண்டினை யீத லொக்குமே.

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

ஒழுக்கநிலை, அரசியல் பொருள்நிலை, அன்பு, அருள், நட்பு ,கல்வி, உதவி, ஒற்றுமை, தெய்வந்தொழுதல் ,உலகியல் நிலையாமை ,தவம், மெய்யுணர்வு, குடும்ப வாழ்வு ,கல்வி போன்ற மக்களுக்குரிய எல்லா அறமுறைகளையும் இறைக்கொள்கைகளாகப் போதித்துள்ளார். இந்நூல் உலக மக்கள் புகளோடு புண்ணியமும் பேரின்பமும் பெற்று வாழப் பெருந்துணைபுரியும்.



Scanned by CamScanner